22nd March 1963]

திரு. கரு. சீமைச்சாமி : அந்த ஆஸ்பத்திரியின் நிர்வாகச் செல வுக்குப் பணம் இல்லாததால் கிழக்கு ராமநாதபுரம் பஞ்சாயத்து யூனியனிலிருந்து ஆண்டு தோறும் பணம் கொடுத்து வருகிறோம். அப்போதும்கூட அதை நடத்த முடியவில்லை. பிப்ரவரி மாதத் தில் தேவக்கோட்டையில் நடந்த டிஸ்ரிக்ட் டெவலப்மெண்ட் கவுன்ஸில் கூட்டத்தில்கூட இதை அரசாங்கம் எடுத்துக் கொள்ள வேண்டுமென்று ஏகமனதாகத் தீர்மானம் போட்டு அனுப்பியிருக் கிறோம். அதைப் பற்றி அரசாங்கம் பரிசிலனை செய்ததா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : நான் முதலிலேயே சொன்ன மாதிரி அது கொஸ்சினுக்குப் பிறகு தான் வந்திருக் கிறது.

MR. SPEAKER : The question alone is the first information.

சுவாமி விவேகானந்தருக்கு சிலை நிறுவுதல்

* 328 கேள்வி.—**திரு. கரு. சீமைச்சாமி :** கனம் பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதி லளிப்பாரா—

(அ) சென்னைக் கடற்கரையில் சுவாமி விவேகானந்தர் சிலையை நிறுவ உத்தேசமுண்டா ?

(இ) ஆம் என்றால், எப்பொழுது ?

கனம் திரு. வெ. ராமையா : (அ) இல்லை.

(இ) இக் கேள்வி எழாது.

திரு. முனு. ஆதி : தலைவர் அவர்களே, சமுதாயத்திலே நல்ல தொரு புரட்சி உண்டாக்கிய பெரியார் அவர்களுக்கு உருவச் சிலை அமைக்கும் எண்ணம் அரசாங்கத்திற்கு உண்டா ?

MR. SPEAKER : How does the question arise?

கனம் திரு. வெ. ராமைய்யா : இந்தக் கேள்விக்கும், இந்த உப கேள்விக்கும் என்ன சம்பந்தம் ?

கனம் சபாநாயகர் : நானே சொல்லி விட்டேனே அப்போதே.

Water-supply (Tiruchirappalli)

*329 *Q.*—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) when the proposal to construct four over-head reservoirs for boosting water-supply in elevated areas in Tiruchirappalli Municipality was sanctioned;

(*b*) the details of the scheme, including the estimated cost; and